3. விதி 110–ன்கீழ் அறிக்கைகள்

(அ) போக்குவரத்துக் கழகப் பணியாளர் நலத் திட்டங்கள் மற்றும் போக்குவரத்துக் கழகச் சேவையை மேம்படுத்தும் திட்டங்கள் குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவை விதி 110–ன்கீழ் மூன்று அறிக்கைகள் அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களை இணைப்பதிலும்; நாட்டை முன்னேற்றப் பாதையில் அழைத்துச் செல்வதிலும்; நாட்டின் பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்துவதிலும்; சாலைப் போக்குவரத்து முக்கியப் பங்கு வகிக்கிறது. இப்படி இன்றியமையாததாக விளங்கும் சாலைப் போக்குவரத்து சேவையை பொதுமக்களுக்கு, குறிப்பாக, ஏழை, எளிய மக்களுக்கு அளித்துவரும் அரசுப் போக்குவரத்துக் கழகங்களை மேம்படுத்துவதும்; அதன் தொழிலாளர்கள் மற்றும் பயணிகளின் வசதிகளை அதிகரிப்பதும் அவசியமாகிறது. இதனைக் கருத்தில்கொண்டு, அரசுப் பேருந்துகளை இயக்குகின்ற 45 வயதிற்கு மேற்பட்ட ஓட்டுநர்கள் உடல் தகுதியினை அறிந்து, உடல்நலக் குறைவு ஏதேனும் இருப்பின், அதற்கான மருத்துவ வசதி பெற்றுக்கொள்ளும் வகையில், சாலைப் போக்குவரத்து நிறுவனத்தின்கீழ் இயங்கும் பெருந்துறை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் ஆண்டுக்கு ஒருமுறை 'முழு உடல் பரிசோதனை' செய்யப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் தற்போது கருணை அடிப்படையில் பணிபுரிந்துவரும் 338 வாரிசுதாரர்களின் பணி வரன்முறை செய்யப்பட்டு, அவர்களது பணி நிரந்தரம் செய்யப்படும் என்பதையும்; (மேசையைத் தட்டும் ஒலி) பணியில் இருக்கும்போது இறந்துபோன பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்குப் பதிவு மூப்பின் அடிப்படையில் முதற்கட்டமாக ஒரு போக்குவரத்துக் கழகத்திற்கு 50 பணியிடங்கள் என்ற அடிப்படையில், 400 தொழில்நுட்பக் காலிப் பணியிடங்கள் தொழில்நுட்பப் பணி அல்லாத பழகுநர்களுக்கு மூன்று ஆண்டுகள்

2012 மே 9] [செல்வி ஜெ ஜெயலலிதா]

பயிற்சி அளித்து நிரப்பப்படும் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முந்தைய மைனாரிட்டி தி.மு.க. ஆட்சிக்காலத்தில் ஓய்வு பெற்றும், ஓய்வூதியப் பயன்களைப் பெறாத தொழிலாளர்களின் நிலையினைக் கருத்தில்கொண்டு, 2010 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் முதல் 2011 ஆம் ஆண்டு மார்ச் மாதம்வரை ஓய்வு பெற்ற 2,316 தொழிலாளர்களுக்கு ஓய்வூதிய ஒப்படைப்புத் தொகையான 47 கோடியே 71 இலட்சம் ரூபாய் இந்த மாதத்திலேயே வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

இதேபோன்று, 2011 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் 2012 ஆம் ஆண்டு ஜூன் மாதம் வரை ஓய்வு பெற்ற மற்றும் ஓய்வு பெறவுள்ள 4,688 தொழிலாளர்களுக்கு ஓய்வூதிய ஒப்படைப்புத் தொகையான 96 கோடியே 57 இலட்சம் ரூபாய் நடப்பு நிதியாண்டில் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

அரசுப் போக்குவரத்துக் கழகங்களின் வழித்தடப் பேருந்துகளின் எண்ணிக்கை அதிகரித்திருப்பதைக் கருத்தில்கொண்டு, 31—3—2013 வரை ஓய்வு பெறவுள்ள பணியாளர்களின் பணியிடங்களையும் உள்ளடக்கி, 6,910 ஓட்டுநர்கள், 7,402 நடத்துனர்கள் மற்றும் 2,349 தொழில்நுட்பப் பணியாளர்கள் என மொத்தம் 16,661 பணியிடங்கள் நிரப்பப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தப் பணியிடங்களில் 4,511 பதிலி ஓட்டுநர்கள், 4,558 பதிலி நடத்துனர்கள் மற்றும் 88 பதிலி தொழில்நுட்பப் பணியாளர்கள் என மொத்தம் 9,157 பதிலி பணியாளர்கள் நிரந்தரமாகப் பணியமர்த்தப்படுவார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 10—40

அரசுத் துறையின் அனைத்து வாகனங்களையும் பராமரித்துவரும் அரசு மத்திய தானியங்கி பணிமனை, தனது பராமரிப்புப் பணிகளைத் தொய்வின்றி மேற்கொள்ளும் வகையில், மோட்டார் வாகனப் பராமரிப்புத் துறையில் காலியாகவுள்ள 398 தொழில்நுட்பப் பணியிடங்கள் மற்றும் 171 பிற பணியிடங்கள் என மொத்தம் 569 காலிப் பணியிடங்கள் நிரப்பப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

பயணிகள் எளிதாகப் பயணச் சீட்டினைப் பெறும் வகையில், புவி இருப்பிட முறைமை வசதி கொண்ட கையடக்க

TRUTH ALONE TRIUMPHS

இயந்திரங்களைப் பயன்படுத்தி மின்னணு பயணச் சீட்டு வழங்கும் முறை அனைத்துப் பேருந்துகளிலும் அறிமுகப்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

அரசுப் போக்குவரத்துக் கழகங்களால் 300 கிலோ மீட்டருக்குமேல் இயக்கப்படும் தொலைதூர வழித்தட இயக்கத்தினைச் சீரமைக்கும் சீரிய நோக்கத்தின் அடிப்படையில், தொலைதூர வழித்தடப் பேருந்துகள் இனி அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தால் இயக்கப்படும். இதன் காரணமாக, அரசு விரைவுப் போக்குவரத்துக் கழக தடப் பேருந்துகளின் எண்ணிக்கை 905—லிருந்து 1,761 ஆக அதிகரிக்கப்படுவதை அடுத்து (மேசையைத் தட்டும் ஒலி) ஸ்ரீரங்கம், திண்டுக்கல், தேனி, காரைக்குடி, கரூர், ஈரோடு மற்றும் ஓசூர் ஆகிய ஏழு இடங்களில் புதிய பணிமனைகள் அமைக்கப்படும் என்பதையும்; (மேசையைத் தட்டும் ஒலி) கூடுதல் கண்காணிப்புப் பணிகளை மேற்கொள்ளும்பொருட்டு திருச்சி மாவட்டம் ஸ்ரீரங்கத்தில் பொது மேலாளர் அலுவலகம் ஒன்று தோற்றுவிக்கப்படும் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இது மட்டுமல்லாமல், கூடுதல் பேருந்துகள் இயக்கப்படுகின்ற அளவிற்குப் பணிமனைகள் இல்லாததைக் கருத்தில்கொண்டு, சென்னை, விழுப்புரம், சேலம், கோயம்புத்தூர், கும்பகோணம், மதுரை மற்றும் திருநெல்வேலி அரசுப் போக்குவரத்துக் கழகங்களால் தமிழ்நாடு முழுவதும் 25 புதிய பணிமனைகள் அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

எனது அரசின் இந்த நடவடிக்கைகள் காரணமாக, போக்குவரத்துக் கழகங்களின் சேவை மேலும் செம்மையுறும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(ஆ) சாலைப் போக்குவரத்தை மேம்படுத்த கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்துதல், புதிய பாலங்கள் மற்றும் சாலைகள் அமைத்தல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண்மைத் துறையின் வேகமான வளர்ச்சியிலும், தொழில் துறையின் துரிதமான முன்னேற்றத்திலும், ஊரக மக்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துவதிலும் சாலைக்